[1993 ஏப்ரல் 22

424—

ராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கும் நூலகங்கள்.

*15716— டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கும் நூலகங்கள் எத்தனை?

(ஆ) அக்குழுவின் உதவிபெற நிபந்தனைகள் என்னென்ன?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த ஒரு நூலகமும் இயங்கவில்லை.

(ஆ) இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை இணை நிதி உதவி திட்டம் மற்றும் இணை உதவி அல்லாத திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் நூலகங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இணை உதவி திட்டத்திற்கு இணையான தொகை மாநில அரசு பங்குத்தொகையாக செலுத்துதல் வேண்டும். இணையில்லாத நிதி உதவி திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு நூல்கள் வாங்க நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நூலகங்கள் இந்த நிதிஉதவி பெற்று வருவதாக அங்கே நூலக ஆணைக் குழுவில் கூறுகிறார்கள். மாவட்ட நூலகங்கள் கூட இந்த ராஜாராம் மோகன்ராய் நூலகக் குழுவினுடைய உதவி பெற்றுத்தான் இயங்குவதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு இயங்குகின்ற அந்த நூலகங்களுக்கு அரசு மானியம் பாதி தொகைகொடுப்பதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு இருக்கிற அந்த நூலகங்கள் போல மேலும் பல நூலகங்கள் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா? அதற்குரிய நிபந்தனைகள் யாவை என அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என தறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நூலகங்களுக்கு ராஜா ராம் மோகன் ராய் நூலகக் குழு மூலம் உதவி கிடைப்பது என்பது ஒரு சில சந்தர்ப்பங்களிலே தருகிறார்கள். அது தவிர மற்றபடி நம்முடைய நூலகங்கள் எல்லாம் நம்முடைய நிதி ஆதாரத்தின் பேரிலேதான் நடைபெற்று வருகின்றன. அதற்காக சொத்து வரியிலே நாம் தனியாக ஒரு நூலக வரி என்று போட்டு வசூலித்து, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு தான் மாவட்ட நூலகங்கள் எல்லாம் நடத்தி நூலகக் குழுவையும் அமைக்கின்றன, நூல்கள் வாங்குகின்றன, மற்ற பராமரிப்பு எல்லாம் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் ராமநாதபுரம் மாவட்டத்திலே இயங்குகின்ற நூலக குழுவும் இந்த அரசினுடைய நிதி ஆதாரத்தின் பேரிலே தான் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் ஆரம்பிக்கும்போது இந்த உதவியுடன் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நூலகம் ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசிடம் ஏற்கனவே இருக்கிறது. அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களேயானால் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 425, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 426, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

426—

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி.

* 15993—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொன்னேரி தொகுதியில், சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS